Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC.No.75 /2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS -6

| | | | |
|---|---|---|---|
| Name: | சேகர் | Calling: | உதவி ஆய்வாளர் ஓய்வு |
| Father's Name: | முனிவெங்கடசாமி | Religion: | |
| Village: | குடியானகுப்பம் | Age: | 64 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 12.02.2026 நேரம் : 11.15 AM

( எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா.6 முதன்மை விசாரணை.

நான் கடந்த 31.05.2019 ம் தேதி நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து ஓய்வு பெற்றேன். கடந்த 2015 ம் வருடம் திம்மாம்பேட்டை காவல் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த போது 29.01.2015 ம் தேதி நிலையத்தில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக கொடுத்த புகாரை பெற்று திம்மாம்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 8/2015 சட்டப்பிரிவுகள் 457, 380 இதச படிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **புகார் மனு ஏற்கனவே அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகார் மனுவின் அசலை முதல் தகவலுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன்.

இவ்வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 29.01.2015 ம் தேதி மாலை 17.00 மணிக்கு சம்பவடமான நாராயணபுரம் ஸ்ரீநாகலம்மன் கோவில் இடம் சென்று சாட்சிகள் திருப்பதி, சாமு ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். **பார்வை மகசர் அ.த.சா.ஆ 5 ஆகவும் மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. சாட்சிகள் கிருஷ்னன், மாணிக்கம்மாள், ஆனந்தன், திருப்பதி மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு கோப்பினை மேல் கட்ட புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு. மோகன் தாஸ் அவர்களின் பார்வைக்கு வைத்துக்கொண்டேன். நான் விசாரித்த சாட்சிகள் அனைவரும் குவிமுச 161(3) வாக்குமூலத்தில் உள்ளது போல் தான் கூறினார்கள். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

புகார் மனுவின் முகப்பில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் காணாமல் போன தேதியாக எந்த தேதி குறிப்பிட்டுள்ளது என்றால் 25.01.2015. காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி 29.01.2015 என்றால் சரிதான். ஐந்து நாட்கள் கழித்து புகார் கொடுத்தற்கான காரணம் தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. அ.சா. 4 மற்றும் அ.சா.5 வழக்கு விவரம் எதுவும் தெரியாது என்றும் எழுதப்படாத வெள்ளை தாளில் தான் கையொப்பம் தான் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சரியாக புலன் விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சேகர்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.13 13:04:00 +0530